04

உ

சிவமயம்.

கணபதிதுணை.

அளகாபுரி

ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசுரர்

# திருவிரட்டைமணிமாலை.

OFFICE OF THE ... MADRAS
No.
4- JAN 1929

இது

ஸ்ரீவன்றொண்டரவர்கள் மாணுக்கர்

காரைக்குடி ராம. சோ.

சொக்கலிங்கச்செட்டியாரவர்களால்

செய்யப்பெற்று

ஷை யூர் ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேசுரர்கோயில் திருப்பணி
தமது சொந்தமாகவேசெய்து நித்தியபூஜாதிகள்
நடத்திவருகின்ற

அரு. அள. அளகப்பசெட்டியாரவர்களால்

சிதம்பரம்

ஸ்ரீ குஞ்சிதசரணம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

விபவ௵ மார்கழிமீ ௨௨

Q23:38.21195
N29
180514

சிவமயம்.

# சிறப்புப் பாயிரம்.

——(o)——

இந்நூலாசிரியர் மாணுக்கருள் ஒருவர்
காரைக்குடி நா. முருகப்பசெட்டியாரவர்கள்
இயற்றியது.

பொன்னு ரளகைமன் மீனுக்ஷி சுந்தரர் பூங்கழற்குத்
தன்னுரி னுற்சே யிருமணி மாலை தனைப்புனைந்தான்
முன்னு வுயர்தவஞ் செய்தரன் பூசை முதிர்ந்தோளிரும்
என்னுரி யன்சோக்க லிங்கமெய்த் தேசிக னேர்பெறவே.

———

உ

சிவமயம்.

மகாகணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

## அளகாபுரி

## ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசுரர்

# திருவிரட்டைமணி மாலை.

பூமே வளகா புரியங் கயற்கண்ணி
தூமே வருட்சோம சுந்தரர்க்குப்—பாமாலை
அற்பகமே விப்புனைவா னுங்கருளுந் தேங்கமல
கற்பகக ணேசன் கழல்.

---

திருவழுதி நாட்டிற் றிகழ்வை சியர்வாழ்
தருபலநல் லூர்களின்மேற் சால்பு—பெருகும்
அளகா புரியில்வா ழங்கயற்கண் ணம்மே!
வளனார் திருவருள்செய் வாய். (௧)

வாய்மை முகம ணிதுவிது வாமென மன்னுணர்ந்தே
தூய்மை நெறிநின் றுலகுய நான்மறை சொற்றருணி
ஆய்மை யிலருமெய் தேர்ந்துயத் தேற்றினை யாதியந்தம்
தாய்மை யளகையில் வாழ்சோம சுந்தர தற்பரனே. (௨)

இதன் கருத்து:—தற்பரனே, உலகர் மனமலையா தொரு மித்து உண்மைஇதுஉபசாரமிதுவென்றுணர்ந்து சுத்தமார்க் கத்தினின்றுய்தற்காகவே நான்குவேதங்கள் கூறியருளியநீ அவ்வாறு ஆராயமாட்டாதவரும் அவ்வுண்மை தேர்ந்துய் யும்படி, முதலில் "அக்கினிமீளே" என்பது முதலிய வாக் கியங்களாலும், மேலும் பற்பலவிடங்களில் ஸ்ரீருத்திரமுதலிய வைகளாலும், முடிவில் "சிவஏகோதியேய:" என்பது முத லிய முடித்துவிளக்கும்வாக்கியங்களாலும் சிவனொருவனே, பசுபதியாகிய ஆண்டவன். இதுவே உண்மை என்பதும், பிரமவிஷ்ணுவாதியதேவர் யாவரும்பசுக்களே. அவனடிமை களே. அவரவர்க்குஆங்காங்குக்கூறும் பரத்துவங்களெல்லாம் அவரவர்தகுதிக்குரிய அதிகாரங்கொடுத்து நியமித்துவைத்த சிருட்டியாதி உத்தியோகநிலைமட்டில் உயர்த்திக்கூறிய உப சாரமே என்பதும் தெளிவித்தனை என்பதாம்.

ஆய்மை—ஆராயுந்தன்மை. தாய்மை—தாய்போலு மினியதன்மை. அதனைச்செய்யுஞ் சோமசுந்தர என்க. (உ)

தற்பரன்வா மத்தமர்ந்து தண்ணருளே யாவர்க்கும்
அற்பகல்செய் யங்கயற்கண் ணம்மையே—முற்பகனேன்
பில்லாதே ணயினுமீர்த் தின்னருள்செய் வாய்பொழிலிற்
செல்லா ரளகையர சி. (ங)

சிதம் மலர்ப்பொழில் பெய்தேன் விளைநிலஞ் சென்றுதவி
ஓதுசற் பாத்திரத் திற்செய் கொடைஞ ரொழுக்கிலக்கும்
மேதகு சிரள கைச்சோம சுந்தரன் மென்கமல
பாதம் மகம்புறம் போற்றுநர் சேர்வர் பரகதியே. (ச)

இ—ள். தேனானது, நெல்லை விளைவித்து அத்தொழில் செய்தார்க் குதவுஞ் சற்பாத்திரமாகிய வயலிற் சென்றுதவி, நற்கொடைஞர் ஒழுக்கத்தை விளக்குகின்ற அளகைச்சுந்தரேசர்பதம்போற்றுபவர் மேலானபதவிகளைப் பெறுவரென்பதாம். அத்தேனின், செயல்போலக்கொடையாளரும் தமதுபொருள், வஞ்சமில்லாத உத்தமரிடஞ்சென்று அவர்க்கும் அவரால் அவர்போன்ற உத்தமர்க்குமுதவியாம் படி செய்தலே நற்கொடையாம். வஞ்சவேடங்காட்டிவாக்கு விசாலத்தால் மயக்கும் அதர்மர்க்குதவும் பொருள் அவர் செய்யுந்தீமைக்கெல்லாஞ் சாதகமாய் அத்தீமையால் உலகுக்கும் இடர் விளைக்குமாதலாற் கொடையாளர் நன்காராய்ந்து உண்மைதெரிந்தே நல்வழியிற் செய்யவேண்டுமென்க. (ச)

பரைசிவைம கேசை பகவதிப வானி
வரைசுதையு மாதேவி வாமை—யுரையளகை
யம்பதிவா ழுங்கயற்கண் ணம்மைதுணைத் தாண்மனமே
நம்பதிக வாழ்வா நமக்கு. (ரு)

நமவென் பொருணினக் கேயுரித் தேனையர் நண்ணிலரென்
றமையமெய்வே தஞ்சொல்வாய்மையையாருமறிந் துய்யுமா
விமைநம முத்திரை யாற்பர தந்தெருட் டின்புணர்ந்தாம்
எமையருள் வாயள காபுரி வாழ்சுந்த ரேசரனே. (சு)

இ—ள். அளகாபுரிவாழ் சுந்தரேசுரனே, நமஸ்காரம், எத்தேவர்க்கும் மேலாய மகாதேவனாகிய சிவனொருவனுக்கே உரியது. அதனை மற்றைத்தேவர் வசிக்கும் ஆற்றலிலராதலால், பிறர் பிறதேவரை நமஸ்கரித்தாலும் அந்நமஸ்

காரமெல்லாம் அத்தேவர்களாற் சிவனிடமே சேர்க்கப்படும். இதனை வேதம் "நமசேஷ" என்று சிவனொருவனையே கூறுதலாலுந் தெளியலாம். இவ்வுண்மையை யாவருமறிந்துய்யும்படி எம்மதத்தார்க்கும் பொதுவாயுள்ள பரதசாஸ்திரமும்பிரமவிஷ்ணுவாதி தேவர்களை அவரவர் ஆயுதாதி முத்திரையால் விளக்கிச், சிவனொருவனையே சிரமேற் கூப்பும் நமஸ்காரமுத்திரையால் விளக்குகின்றதென்றிவ்வாறு ஆராய்ந்து நிச்சயிக்கும் இன்பநெறியுணர்ந்து உன்னையேபற்றிநிற்கும் அடியேங்களுக்கு அருள்வாய் என்பதாம். (௬)

நேயமிக மான்முதலோர் நின்னுதற் போற்றுமதற்
கேயவே பொன்வாணி யேனையர்நின்—றாயபதம்
நேர்ந்திறைஞ்சிக் கற்புரிமை நேர்விளக்க வாழுளகை
யார்ந்தகயற் கண்ணி யருள். (எ)

இ—து. விஷ்ணுவாதி சகல தேவரும் பரமபதியாகிய சிவனொருவனையே போற்றிவாழ்தலால் அதற்கிசைய அத்தேவபத்தினிகளாகிய இலக்குமிமுதலோர், சிவபத்நியாகிய உன்னைப் பணிந்துபோற்றி நாயகர் கருத்துக்கிசையவே நாயகிகள் செய்யவேண்டுமென்னுங்கற்புரிமைவிளக்க அவர்கள்பணிகொண்டுவாழுகின்ற அங்கயற்கண்ணி! அருள் என்பதாம். (எ)

அருளே யிடத்தொரு மாதெனக் கொண்டரு ளண்ணனின்னைப்
பொருள்சேர மாமுழு நற்பதி பற்பல பொற்புறலுந்
தெருளா தரிபதி யென்பார் வினைவலி தீர்வெளிதோ
மருளார்க் கருளள கைச்சுந்த ரேசுர மாமணியே. (அ)

9 180574 சென்னை-600

இ—து. மருளாதவர்க்குஅருள்கின்றசுந்தரேசனே விஷ்ணு உன்னைப் பூசித்து வாழ்வுபெற்ற பற்பல தலங்கள் பொலிவுற்றுவிளங்குதலையும் தெளியாமல் விஷ்ணுவைப்பரம் பொருளென்பவர் தீமை எளிதில்நீங்குமோ என்பதாம். (அ)

மணியினொளி பூமணம்போன் மாதேவ நாம
குணியி னிடனுர் குணமே—பணியுயிரோர்க்
துய்ய வருண்மேனி யுற்றளகை வாழ்கயற்கண்
ணையையுனை வேண்டன்மிகை யாம். (கூ)

இ—து. மகாதேவ நாமத்தையுடைய குணியாகிய சிவனிடத்தார்ந்த அவனதருளாகிய குணமே, உயிர்களுய் யவே அருளால்மேனிகொண்டு விளங்குகின்ற உன்னை எங் களுக்கு அருளுக என்றுவேண்டுதல் மிகைஎன்பதாம். (கூ)

ஆவிக ளோர்ந்துய வேமறை யோகினை யம்முறையே
சீவருண் டென்பது தேற்றவு மாவி செகம்பொயென்றே
நாவறை வார்சிலர் நாமே பிரமம் நவில்குவரப்
பாவரை நீத்துய் வருள்வா யளகைப் பதிமுதலே. (கo)

இ—து. அளகைப் பதிமுதல்வனே! சீவர்கள், விதி விலக்கறிந்து விலக்குநீக்கி விதிவழிஒழுகி உய்தற்காகவே வேதாகமங்களை வெளியிட்டருளினை. வேதாகமங்களிருப் பதுகண்ட அம்மட்டிலேயே ஓதிஉய்யும் சீவர்களிருப்பதும் செவ்வே தெளியலாம். இதுவும் நோக்காமல் பிடித்ததே சாதிக்கும் முருட்டுப்பிடிவாதத்தால் சிலர், சீவரும்பொய்; சீவரிருந்துவாழுஞ் செகங்களும்பொய், சீவர்க்கருளும் ஈச

னும் பொய்யென்று நாவேகுறுந்தடியாக வாய்ப்பறையறை வர். அம்மட்டிலுமமையாது நாமேபிரமம். சுவர்க்கம், நரகம், பாவம், புண்ணியம், பந்தம், மோக்ஷமெல்லாம் பொய்யே. நாம் எதைச்செய்யினும் அப்பலன் நம்மைச்சேர்வதில்லையென்றுகூறி இஷ்டப்படி உண்டுசுகித்துத் திரிகின்றனர். இப்பாவிகள் வஞ்சனையிலகப்படாமல் தூரத்தேநீங்கியுய்யும்படி அருள்க என்பதாம். (கo)

முதலைச்செவ் வாய்ச்சியர்தம் மோமறுத் துய்வான்
நிதலைச்செய் பூண்முலைமா தேவி—விதலைமுடி
நின்னுதன் பாங்கமரு நின்னருவை—மன்னளகை
அன்னையென் னுட்பதிப்பா யாண்டு. (கக)

விதலை—விது, அலை. அவை மதியும் நதியுமாம்.

பதிபசு பாசமெய் யென்றுவே தாதி பலகலைசொல்
இதமுணா ரார்சில வேதாந்த மோதுவ ரிக்கருத்தோர்
விதியிலர் யாவும்பொய் நாமே பிரமமென் வீணர்செயல்
அதமுற வேயருள் வாயள காபுரி யங்கண்ணனே. (கஉ)

இ—ள். அங்கண்ணனே, சிலர், வேதவேதாந்தாதி பற்பலநூல்களும் பதிபசுபாசமுப்பொருள்களும் மெய்யே என்றுகூறும் நன்மையை உணராதவராய், எல்லாம்பொய்யே பிரமம் ஒன்றேமெய் நாமேபிரமம் என்று நிராலம்ப முதலிய சிலவேதாந்தங்கள்கூறுவர். அவ்வேதாந்தங்களின் உண்மைக் கருத்துணரும் நல்லூழில்லாராதலின், அவ்வீணர் செயல் நீங்கி உய்யும்படி அருள்வாய் என்பதாம். நிராலம்பாதி உப

சாரவேதாந்தங்கள், முப்பொருளும் மெய்யே என்று கூறுகின்ற உண்மை வேதாந்தங்களை மறுத்துக்கூறுவனவல்ல. கீழ்க்கீழுள்ள தேகேந்திரியாந்தக்கரணாதி சடப்பொருள்களையே பிரமமெனப்பற்றி நிற்கும் அற்ப அறிவினர்க்குத் தத்துவம் (௩௬)ம் கடந்து அதீதமாய் நிற்கின்ற நிர்மலசித்துப் பொருளேபிரமமென்றுள்ளபடிகூறினால், அவர்கள்நிற்குநிலைக்கு அதிதூரமாதலால் எட்டிப்பிடிக்கமாட்டார்கள். அவரறிவினளவுக்குத் தக்கபடி அச்சடப்பொருள்களுக்குமேல் அடுத்துநிற்குஞ் சிவனாகிய சித்துப்பொருளைப்பிரமமெனக் காட்டினாற்றான் எட்டிப்பிடித்து மேலேறிவருவாரென்னும் நோக்கத்தால், சிவர்களாகியநாமேபிரமமென்று கூறினஉபசாரமேயன்றி உண்மையன்றெனக. (௧௨)

அங்கயல்போ லாவியுய் வாரருள்செ யங்கண்ணி
சங்கரிம னேன்மனியெந் தாய்தருண—மங்கைநீ
யாதலினு லாகமுயிர்க் காம்பிணிதீர்த் தம்புயப்பூம்
பாதநிழல் வாழ்வருள்வாய் பார்த்து. (௧௩)

பார்த்தன் வழுதி வனசரர் சாக்கியர் பாற்குழைந்தே
யீர்த்தடி யும்பொறுத் தாருள் செய்தனை யீதுணர்ந்துஞ்
சேர்த்தமெய் யன்பில னென்செய்வல் யாவுந் திருவருளே
கார்த்த மிடற்றள காபுரி வாழுமுக் கட்கரும்பே. (௧௪)

கரும்பினுமின் சொன்மீனக் கண்ணம்மே நாயேன்
இரும்பினும்வன் னெஞ்சுடைய னேனும்-விரும்பியெனை
யீர்த்தருள்வதுன்கடனு*மின்னதுதாய்சேய்முறைத்தாஞ்
சேர்த்தவள கேசையருள் செய். (௧௫)

*இன்னது—இவ்வாறு அடியேனைவலிந்திழுத்தருள்வது; தாய்சேயினிடத்து இரக்கமிகுதியால் வலியவந்தருளு முறையினதேயாமென்க. (கரு)

செய்தவத் தாலோர் தனதற் களகைத் திருவருணீ
உய்தன வைசியர் பல்லோ ரவனிலு மோங்களகை
எய்தல்பன் மாண்பின தென்றே யமரள கேசசிவ
மைதழை கண்டமெய் வாழ்வடி யேற்கு வழங்குகவே. (கசு)

இ-து. தவஞ்செய்த ஒருகுபேரனுக்கு வடதிசை அளகாபுரிச்செல்வமளித்த நீ, பற்பல தருமங்கள் செய்துய்கின்ற மகுடதனவைசியர்களாகியபலகுபேரர்களிருந்து அவனிலும்மேலாய் ஓங்குகின்ற தென்றிசை அளகாபுரியில் நாம் வசித்தலே பலவித மாண்பினதென்று வசிக்கின்ற இவ்வளகாபுரி யீசனே! சிவனே! நீலகண்டனே! அடியேற்கு மெய் வாழ்வு வழங்குக என்பதாம். (கசு)

வழுத்துலகுக் கெல்லாமோர் மாதாநீ வாய்மை
ஒழுக்கறிஞர் மேன்மேற்சென் றுய்வ—ரழுக்கொழியாத்
தீயேனீ யோய்பினலாற் சென்றுய்வ தெங்களகைத்
தாயே யருளா தரித்து. (கஎ)

இ-து. அளகாபுரியில்வாழுந் தாயே நீ சர்வலோகங்களுக்கும் ஒரே மாதா. சர்வசீவரும் உன்பிள்ளைகளே. அவருள்ளும் நல்லொழுக்கமுள்ள ஞானிகள் உன்னருளைப் பெற்றவர்களாதலால் அவர்கள் மேன்மேற் சென்றுய்வர். மேலுமவர்களுக்கருளுதலைக் காட்டிலும் மலவழுக்கு நீங்கப் பெறாத தீயவனாகிய அடியேனுக்கு அருளுதலே உன் இரக்

க்குணத்துக்கு அழகாம். அடியேன் உனதுசொரூபநிலை யறிந்துவந்தடைதற்குரிய அறிவில்லேன். நீயே இரங்கியரு ளினாலன்றி உய்வதெப்படி? ஆதலால் அடியேனை ஆதரித் தருள்வாய் என்பதாம். (கஎ)

தாணியிற் பஃறலந் தீர்த்தம்பல் லூழிமுற் சார்ந்தனசீ
வரையுய் வுறத்துதற் கென்பது மோர்கிலர் மான்மிக்குநாம்
பிரமமற் றொன்றிலை யென்பா ரவர்நிலை பேர்த்தருள்வாய்
திரமன் னளகையில் வாழ்சோம சுந்தர சிற்பரனே. (கஅ)

இ—து. நிலைபெற்ற அளகாபுரியில்வாழ் சோமசுந்த ரனே, பூமியில் பற்பல தலந்தீர்த்த மூர்த்திகள் பல்லூழிக ளுக்கு முன்னரே இருந்து விளங்குகின்றன. சீவர்களும் எப்போதுமிருத்தலாற்றான் அவர்கள் வழிபாடுசெய்துய்தற் காகவே அவைகளிருக்கின்றனஎன்று நேரிலுந்தெளியலாம். நாமே பிரமம் சீவர்கள் மூர்த்திதலந்தீர்த்த முதலிய ஒன்று மில்லை எல்லாம்பொய்யேயென்று வம்புபேசும்மாயாவாதிகள் நிலைகளை நீக்கியருள்வாய் என்பதாம். (கஅ)

சிற்பரன்பா லொத்திருந்து சீவர்க் கருள்கெனுமின்
சொற்புகலு மாதேவீ தூயளகை—யிற்பாவும்
அங்கயற்கண் ணம்மே யடியேங்கட் கென்றுநின
தங்கமலத் தாட்கன் பருள். (ககூ)

இ—து. சிற்பரனிடத்தில் அவன்வடிவுக்கு ஒத்த வடிவுடன் எப்போதுமிருந்து எம்பெருமானே நமதுபிள்ளை களாகிய சீவர்களுக்கு அருளுக என்று இனியமொழிகூறு கின்ற உமாதேவீ உன்திருவடிக்கன்பே எப்போதும் அருள் என்பதாம். (ககூ)

அருளே புரிதி யளகேச வோர்ந்து மலக்கண்மிகு
மருளா லருள்கென வேண்டுது மேழைய மற்றதுநீ
தெருள்வாய்மிகையென் றொறுக்கினுமுய் துந்திருக்கரத்தால்
திருவாழ் வுறவணைப் பாய்மீண்டு மீதுன் திருவருளே. (உ0)

இ-து. அளகாபுரியில் வாழுமீசனே, நீ எப்போதும் சீவர்க்கு அருளே புரிகின்றாய். இவ்வுண்மை நன்குணர்ந்தும் அடியேங்கள் அறிவிலாத ஏழைகளாதலால் துக்கமிகுதி சகிக்கமுடியாத மயக்கத்தால் எங்களுக்கு அருள்வாயென்று வேண்டுகின்றோம். இவ்வுண்மை நீ அறிவாய். ஆயினும் ஒருவாறு அடியேங்கள்வேண்டிக்கொள்வது மிகை என்று ஒறுத்தாலும் மீண்டுந்திருக்கரத்தால் எடுத்தணைத்தருள்வதுன்கடமையேயாதலால் அதனாலும் உய்தியேபெறுவோம். இது உனது திருவருளேயாமென்பதாம். (உ0)

அளகையம ரங்கயற்கண் ணனைசுந்த ரேசர்திரு வருள்கள் வாழி
இளகருள்செய் தன்னவர்வீற் றிருந்தருளுந்திருக்கோயிலினிதுவாழி
பளகிரியத் தளிசெய்து பகர்பூசை நடத்தளகப் பன்சீர் வாழி
வளநிறைவை திகசைவ மார்க்கசிவ சாதனங்கண் மன்னி வாழி.

திருச்சிற்றம்பலம்.

திருவிரட்டைமணிமாலை

முற்றிற்று.

ஆவணக்காப்பகம் சென்னை-600 008.
180574